www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தில்....

# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# EPRLF IN EELAM STRUGGLE

பாசமிகு ஈழ மக்களே,

ஈழப்போராட்டத்தின் மிகக்கடினமான காலகட்டம் இப்போது கண்களின் முன் விரிகிறது. ஆதிக்கமும், அராஜகமும் ஒன்றாய் கைகோர்த்து ஈழப்போராட்டத்தை நசுக்கி விடுவதற்கு முன்னேறிவருகின்றன. இதுவரைகாலமும் சிறீலங்கா நவபாசிச அரசின் நரவெறி அடக்குமுறைகளை மாத்திரம் இரத்தச்சிதறல்களாகக்கண்ட நாம் இன்று புதிய அடக்குமுறையாளர்களின் கோரத்தாண்டவங்களைக்காணவேண்டிய வரலாற்றுக்கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

சுதந்திரத்திற்காகப்போராடும் உன்னதமானவர்களின் சுதந்திரம் மறுக்கப்படுவதை நாம் எப்போதுமே அனுமதிக்கப்போவதில்லை என்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுதியான கொள்கைகளையும், அராஜகத்துக்கு எதிராக எமது கடைசிப்போராளி இருக்கும் வரை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி போராடும் என்ற உறுதியான பிரகடனமும் இன்று போராட்டத்தில் பிற்போக்கு சக்திகளின் பலமான எதிர்ப்பை எங்களுக்கு சம்பாதித்துக்கொடுத்திருக்கிறது.

இந்த பிற்போக்குச்சக்திகள் ஈழப்போராட்டத்தை திசை திருப்புவதையே மொத்த நோக்கமாகக்கொண்டு அரசியல் வறுமை கொண்ட இயக்கங்களுக்குள் ஊடுருவி மேலும் சில ஆதிக்கச்சக்திகளுடன் கைகோர்த்து புரட்சிகர சக்திகளை செயலிழக்கச்செய்யும் புதைகுழிகளை தோண்ட ஆரம்பித்துள்ளன. போராட்டத்தை எமது பொது எதிரியான சிறீலங்கா நவபாசிச அரசுக்கும் அதன் ஏகாதிபத்திய, முதலாளித்துவ எஜமானர்களுக்கும் எதிராக முடுக்குவதை விடுத்து இன்று சில இயக்கங்களும் எமக்கெதிரான சேறடிப்பையே தமது "புனித கடமையாக" செய்துவருகிறார்கள். அகன்ற சிந்தனையும் நீண்டநோக்கும் அற்ற இவர்கள் எமது போராளிகளுக்கும், போராட்டத்துக்கும் நீள, அகல குழிகளை எப்படி வெட்டுவது என்பதிலேயே தமது சக்திகளைச் செலவழிக்கின்றன.

இக்கட்டான இந்நிலையிலும் இரத்தத்தோடு கலந்து விட்ட எமது போராட்டம் தொடர்கிறது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது வரலாற்றுப்பங்களிப்பை தொடர்கிறது. எமது உன்னதமான போராளிகள் பொது எதிரிக்கு எதிராக உக்கிரமாகப் போராடுகிறார்கள். எமது பாசமிகு மக்கள் உயர்ந்த ஒரு வரலாற்றைப்படைக்கிறார்கள். போராட்டம் தொடர்கிறது. பிற்போக்குச்சக்திகளின் சதிகளும் தொடர்கின்றன, இவை புரட்சிப்பாடத்தில் புதியவையல்ல. எதிர்பார்க்காதவையும் அல்ல. இன்றைய இந்த அனுபவங்கள் மக்களுக்கு பல பாடங்களைக்கற்பிக்கும்; நடுத்தர வர்க்க குணாம்சக்கோட்டைகளைத்தகர்த்து இந்த பிற்போக்கு சக்திகளின் குணாம்சங்களை உணர்த்தும், உறுதியான போராட்டத்துடன் மக்களை இணைக்கும். சுதந்திரத்தின் மகத்துவத்தை விளக்கும். இது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கருத்து.

எங்கள் தவறுகள் உங்களினால் விமரிசிக்கப்படட்டும், நாம் திருந்துகிறோம். எங்கள் வழிமுறைகள் உங்களால் விமரிசிக்கப்படட்டும் நாம் செழுமைப்படுகிறோம். எங்கள் பார்வைகள் எப்போதும் உங்களை நோக்கியே ஏனெனில் எங்கள் எஜமானர்கள் துப்பாக்கிகள் அல்ல. மக்களே! பாசமிகு ஈழமக்களே!

சமீப நாட்களில் ஈழப்போராட்டத்தில் நாம் பதித்த சில காலடிச்சுவடுகளின் அடுத்த தொகுப்பை உங்களிடம் சமர்ப்பிக்கிறோம். உயிரைத்துச்சமென மதித்து உன்னதமான போராட்டத்தை முன்னெடுக்கும் உயர்ந்த எங்கள் தோழர்களின் கரங்களைப்பலப்படுத்துங்கள், போராட்டத்தோடு நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'விஜி' விடுதலையாகும்வரை

# போராட்டம் நடைபெறும்

யாழ்ப்பாணம், திங்கள்


'அன்பான மாணவர்கள்' என்ற தலைப்பில் வெளிவந்த குறிப்பிடப்படாத துண்டுப் பிரசுரத்திற்கும் தமக்கும் எவ்வித தொடர்புமில்லை என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு தெரிவித்துள்ளது;



இத்துண்டுப்பிரசுரம் சம்பந்தமான அணுகுமுறையைத் தாம் கண்டிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்:

விஜிதரன் கடத்தலைக் கண்டித்து நடைபெற்று வந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் விடுதலை அமைப்புகள் தமது கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டதன் பேரில் நிறுத்தப்பட்டுள்ளதாகவும், இந்த அடிப்படையில் இம்மாதம் 3ம் திகதிவரை வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கும் போராட்டமும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் பொதுக்கூட்டத்தையடுத்து விஜிதரன் விடுதலை செய்யப்படும்வரை ஏதாவது ஒரு போராட்டம் நடைபெறுமென்றும் மாணவர் அமைப்புக்குழு தெரிவித்துள்ளது. [ஒ]




விஜிதரன் கடத்தலைக் கண்டித்து யாழ். பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த மாணவிகளான உ. ஒளவை [விஞ்ஞான பீடம்] மு. விஜயகுமாரி [கலைப்பீடம்], ஆகியோர்.



யாழ். பல்கலைக்கழகத்தில் சாகும்வரை உண்ணாவிரதமிருந்த மாணவர்களை இங்குள்ள படங்களில் காணலாம். மேலே; எஸ். பிரசாத் [வெளியார்] த. விமலேஸ்வரன் [வணிகபீடம்] கீழே: இ. குகதாசன் [வணிகபீடம்] ஜே. எக்ஸ் செல்வநாயகம் [கலைப்பீடம்]

## பல். மாணவர் போராட்டம்

# ஜனநாயகத்தைப் பாதுகாக்க நடத்தப்படுகிறது

**— ஈ. பி. ஆர் எல். எவ்**

யாழ்ப்பாணம், ஞாயிறு

''யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டம் போராடும் மண்ணில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக தீர்க்கப்படுகிறதாகவே நாம் கருதுகிறோம். பல்கலைக்கழக மாணவர்களின் பல பிரசுரங்களும், அறிக்கைகளும், சாகும்வரை உண்ணாவிரதத்தில் பங்குபற்றும் மாணவர்கள் ஆற்றிய உரையும் ஐயத்திற்கு இடமின்றி இதை நிரூபித்துள்ளன. மக்கள் எவ்வகையிலும் குழம்ப வேண்டிய அவசியமில்லை.'' இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி [ஈ பி ஆர் எல் எவ்] விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வீட்டிலிருந்த விஜிதரனைக் காணவில்லை. கேட்டுப் பார்த்த இடங்களிலும் பதிலில்லை. இந்நிலையில் போராடுவதைத் தவிர மாணவர்களுக்கு வேறு வழியில்லை. விஜிதரன் கடத்தப்பட்டானா? காணாமல் போனானா? என்ற சட்டவாதங்களுக்கு இங்கு இடமில்லை. விஜிதரன் கடத்தப்பட்டானா, காணாமல் போனானா என்பது சமம். அவன் இல்லை. விஜிதரன் சிந்த சுவாதீனம் அற்றவனும் அல்ல.

விஜிதரன் விவகாரம் வெறுமனே ஒரு மாணவன் சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல. இது மக்களின் உயிர் வாழும் உரிமை, பாதுகாப்புக்கான உத்தரவாதம், தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம் போன்ற அடிப்படை ஜனநாயக உரிமைகளோடு ஆழமாக பிணைந்துள்ள விடயமாகும். நடவடிக்கைகளோடு பின்னிப் பிணைந்துள்ள விடயமாகும்.

அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் ''அராஜகத்தின் ஆணிவேரை அறுத்தெறியவும், தப்பலைச் சாதிக்கவும் துணிந்துவிட்ட மாணவர்களோடு சேர்ந்து விளையாடுவது ஆபத்தானது என்பதும் நிரூபணமாகியுள்ளது. மாணவ சக்தி நெருப்புக்குச் சமன். விஜிதரன் கடத்தப்பட்டமையை கௌரவப் பிரச்சினையாகக் கருதாது உடன் விடுதலை செய்ய சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும். மாணவர்கள் தொடங்கியிருக்கும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் சாதாரணமல்ல. அதன் உறுதிப்பாடு மக்களை ஒரு உலுப்பு உலுப்ப விடத்தக்கது.

விஜிதரன் விடுதலை செய்யப்படுவதற்கு நிர்ப்பந்திக்கும் போராட்டம் மேலும் மேலும் மாணவர்களின் நடவடிக்கை தீவிரப்படவே வழி கோலும். எனவே விஜிதரன் விவகாரம் மாணவர்களைத் திருப்திப்படுத்தும் வகையில் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். இவ்விடயத்தில் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஆக்கபூர்வமாக செயல்படல் வேண்டுமென வேண்டுகிறோம்.

(23-11-86)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 கார்த்திகை 27 ர. ஆதிர் 10 இதழ் 305

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 13 12 1986



# "எமக்குள் எழும் பிரச்னைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும்"

## நெருப்புத்தின கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம், சனி

'ஈழமண் மீட்புப் போருக்காக ஏந்திய ஆயுதங்களை எம் மக்களுக்கெதிராகப் பிரயோகிப்பதை விடுத்து எமது பொது எதிரிமீது பிரயோகிக்கப்பட வேண்டும். எமக்குள் ஏற்படும் எந்தப் பிரச்னைகளையும் நாம் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமே ஒழிய ஆயுதப் பிரயோகங்களைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்'.

(5-ம் பக்கம் பார்க்க)

## பாஷையூரிலிருந்து புறப்பட்ட ஊர்வலம்

யாழ்ப்பாணம், சனி

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் அனுஷ்டிக்கப்பட்ட நெருப்புத்தினத்தையொட்டி பாஷையூர் அந்தோனியார் கோவில் முன்றலில் இருந்து பெரும் ஊர்வலம் ஒன்று நேற்றுக்காலை ஆரம்பமாகி வண்ணை பெருமாள் கோவில் முன்றலை நண்பகல் வந்தடைந்தது.

முழுக்கமுழுக்கப் பெருந்திரளாகப் பெண்கள் கலந்து கொண்ட இவ்வூர்வலம் கடற்கரைவீதி, ஈச்சமோட்டை வீதி, கொழும்புத்துறை வீதியால் சுண்டுக்குளியை வந்தடைந்தது அங்கிருந்து பஸ்தியாம்பிள்ளைச் சந்தியை அடைந்து கண்டிவீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தை அடைந்து ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி வழியாக வண்ணை பெருமாள் கோவிலைவந்தடைந்தது.

ஊர்வலத்தின் முன்னே நெருப்புதினம் 12-12-86 என எழுதப்பட்ட கறுப்புநிற பதாகையுடன் தீப்பந்தங்களுடன் அணிவகுத்தனர். ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் சுலோகங்களை தாங்கியபடி வந்தனர். (வா)



வண்ணை பெருமாள் கோவில் முன்றலில் நேற்று இடம்பெற்ற நெருப்புத்தின கூட்டத்தின்போது கலந்துகொண்ட பொதுமக்களில் ஒருபகுதியினரை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

### எமக்குள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வண்ணை பெருமாள் கோவில் முன்றலில் நேற்று நண்பகல் இடம்பெற்ற 'நெருப்புதின' பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய திருமதி இராசரத்தினம் இவ்வாறு கூறினார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நெருப்புதினத்தை ஒட்டிய கூட்டத்தில் முழுக்க முழுக்க பெண்களே பெருந்தொகையாகத் திரண்டிருந்தனர்.

செல்வி அஞ்சலி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

### கொடும்பாவி

கூட்ட ஆரம்பத்தில் பாஷையூர் அர்ச் அந்தோனியார் கோவில் முன்றலில் இருந்து ஊர்வலமாக எடுத்து வரப்பட்ட 'ஜெயவர்த்தனா'வின் கொடும்பாவி தீமூட்டி எரிக்கப்பட்டது.

திருமதி இராசரத்தினம் அங்கு தொடர்ந்து பேசுகையில், 'சில காலங்களுக்குமுன்னர் ஈழமண்ணில் இராணுவத்தினருக்குப் பயப்பட்ட எம்முடைய மக்கள் இப்போது விடுதலை இயக்கங்களுக்குப் பயப்படவேண்டியுள்ளது அரசாங்கம் கும்பலை இனங்காணுவதற்கு மக்கள் எமக்கு பூரண ஒத்துழைப்புத்தர வேண்டும்' என்றார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த திருமதி சந்திராதேவி பேசுகையில்; 'நருப்புதின ஊர்வலத்திலும், கூட்டத்திலும் கலந்துகொள்வதற்காக தீவுப் பகுதியில் இருந்து வரும்போது இனந்தெரியாத ஒருசிலர் எமைத் தடுத்து நிறுத்தப் பார்த்தார்கள். இந்நிலையில் இன்று எமது பிள்ளைகளைத் தனியே வெளியே அனுப்புவதற்கு பயப்பட வேண்டியுள்ளது அராஜகச் செயல்களைத்தட்டிக் கேட்டால் கடத்தப்படுவோமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது' என்று கூறினார்

இக்கூட்டத்தில் செல்வி ராஜியும் உரையாற்றினார் (வா)


நமது கரங்களைப் பிணைத்துள்ள
அடிமை விலங்குகள் அறுக்கப்படாவிட்டால்
காலமெல்லாம் நாம் அடிமைகள்தான்
அடிமையாய்... அகதியாய்...
மரணிப்பதற்கா இந்த வாழ்வு?
அடக்குமுறைக்கெதிராக
உறுதியாகப் போரிடுவோம்.
ஆதிக்கத்துக்கெதிராக
உரத்துக் குரல்கொடுப்போம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

**1948 நவம்பர் 15**

**மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்ட தினம்**


மக்கள் குரல்
13-12-86




முதல் நாள் உறை
First Day Cover
15-11-1986



ஈழ விடுதலைப் போராட்டம் வெல்க!
VICTORY TO THE EELAM LIBERATION STRUGGLE




# 'ஈழம்' தபால் தலைகள்: ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணிஏற்பாடு!

சென்னை, டிச. 13:

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி 50 சதம் தபால்தலை, மற்றும் 50 சதம் தபால் உறை ஆகியவற்றை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில தபால் சேவை வெற்றி பெற ஈழமக்கள் ஒத்துழைப்பு தான் முக்கியமான காரணம். தொடர்ந்து ஈழ மக்கள் அந்த ஆதரவை தரவேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கூறியுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள முதல்நாள் கவரில் 15-11-86 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் "1948 நவம்பர் 15 மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட தினம்" என்று கவரின் மேல் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்பாகத்தில் ஈழ விடுதலைப் போராட்டம் வெல்க என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் பச்சை கலரில் அச்சடிக்கப்பட்டுள்ளது.

"ஈழம் தபால் சேவை" என்ற தபால் முத்திரையும் முக்கோண வடிவில் தயார் செய்துள்ளனர். இதனை தபால்தலை மீது குத்தி கவர்களை டெலிவரி செய்கிறார்கள்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வெளியிட்டுள்ள இரண்டு தபால் தலைகளும் ஒவ்வொன்றும் 50 சதமாகும். ஒரு தபால் தலையில் ஈழம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு "1948 நவம்பர் 15" என்று அச்சடிக்கப்பட்டுள்ளது. தேயிலை பறிக்கும் பெண் படம் ஒன்றை போட்டு அதன் கீழே "எழுக மலையகம்" என்று அச்சடிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு 50 சத தபால்தலையில் ஈழம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதப்பட்டு கீழே ஈழ விடுதலைப் போராட்டம் வெல்க என்று அச்சடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் சிங்கள அரசின் அட்டூழியம் காரணமாக நிர்வாகம் சீர்குலைந்தது. எனவே ஈழ மக்களுக்கு சேவை செய்யும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தபால் சேவையை செய்து வருகிறது.

மூன்று மாதத்திற்கு முன் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தபால் தலைகளை முதன் முதலில் புழக்கத்திற்கு விட்டது. பின்னர் நவம்பர் 15-ந்தேதி மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதை நினைவுகூறும் வகையில் ஒரு தபால் தலையை வெளியிட்டது.

மக்கள் குரல்
13-12-86

## போராளிகள் தபால் தலை!

### புழக்கத்துக்கு விடப்பட்டது!!

சென்னை, டிச. 13—

யாழ்ப்பாணத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை இயக்கம் (ஈ.பி.ஆர்.எல்.எப்) கடந்த செப்டம்பர் மாதம் முதன் முதலாக ஈழத்திற்கான தபால் தலையை புழக்கத்தில் விட்டது.

அதன் பிறகு மலையக தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து நவம்பர் 15-ந் தேதி மேலும் ஒரு தபால் தலையை வெளியிட்டது.

இப்போது 50 சதம் மதிப்புள்ள புதிய தபால் தலைகளை வெளியிட்டு இருக்கிறது. இந்த தபால் சேவை வெற்றியளிக்க ஈழ மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல். எப். வேண்டுகோள் விடுத்து உள்ளது.

www.tamilarangam.net

ஈழநாடு

THE GUARDIAN.
LONDON.
(20-12-1986).

(22-1-1987.)

# ஆயுதப் புரட்சி மூலம்

# இலங்கை அரசை கவிழ்க்க சதி

## 23 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

கொழும்பு, புதன்

இலங்கை அரசை ஆயுதப் புரட்சிமூலம் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம் தீட்டியவர்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலதிபர் திரு கே. பத்மநாபா, பல்கலைக்கழக பேராசிரியர் இரு தமிழர்கள் உட்பட இருபத்துமூன்று பேருக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இலங்கை அரசு குற்றச்சாட்டு புனைந்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. குற்றம்சாட்டப்பட்ட சிங்களவர்களில் பலர் கொழும்பிலுள்ள பிரபல முக்கியஸ்தர்கள். இவர்களில் ஒருவர் அரசுக்கு உரித்துடைய பெரியதோர் கூட்டுத்தாபனத்தின் தலைவரின் மகன். இன்னுமொருவரின் தந்தை செல்வாக்குடைய மெதடிஸ்த மதகுரு. இன்னொருவர் நியூயோர்க் பல்கலைக்கழகத்தில் பட்டம்பெற்ற கல்விமான். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் அரசியல்

ஆயுதப் புரட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஞ்ஞானத்தில் பட்டம்பெற்றவர். இக்குழுவிலுள்ள பெண்களில் ஒருவர் பல்கலைக்கழகத்தின் கிரேக்க மொழி விரிவுரையாளர்.

இந்த பெண் விரிவுரையாளர் கடந்த நவம்பர் தொடக்கம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலையில் இந்தப் பெண், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும், உடல்நலம் குன்றியிருந்த போதும் பல இன்னலுக்கு உட்படுத்தப்பட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஆயுதப்புரட்சி ஒன்றை இலங்கையில் ஏற்படுத்துவதன் மூலம் குழப்ப நிலையைத் தோற்றுவித்து அதன்மூலம் ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட ஜே.வி.பி. அமைப்பைச் சேர்ந்த 22 சிங்களவர்களுடன் தமிழீழ விடுதலைப் போராட்ட அமைப்பான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்த ரஞ்சித் என்னும் கே. பத்மநாபாவுக்கு எதிராகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த இருபத்துமூன்று பேரும் ஆயுதப்புரட்சி செய்து அரசைக் கவிழ்க்கமுனைந்ததுடன் சட்டவிரோதமாக வெடிமருந்துகளையும், வெடிகுண்டுகளையும் பெருமளவில் பதுக்கி வைத்திருந்தார்களென்றும், கொள்ளைகளில் ஈடுபட்டிருந்தனரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஜே.வி.பி அமைப்பினர் தமது இரு உறுப்பினர்களை இந்தியாவில் தமிழ் போராளிகளுடன் இணைந்து பயிற்சி பெறுவதற்காக அங்கு அனுப்பி வைத்திருந்தார்களென்றும், வன்முறைமூலம் இலங்கை அரசை கவிழ்க்க தமிழ்ப்போராளிகளை தூண்டிவிட்டார்களென்றும் குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக்குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசின் சார்பில் சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி இவ்வழக்கை கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

எனினும் குற்றம் சாட்டப்பட்டுள்ள இவ்விருபத்துமூன்று நபர்களில் பலர் தற்போது இலங்கையில் இல்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# Tamils 'in plot with Sinhalese'

From John Rettie
in Colombo

A group of 23 revolutionaries, mainly intellectuals from leading Sinhalese families, but also including three Tamils, has been charged with conspiring to overthrow the Government by force.

The group, alleged to have been preparing for armed revolution between August, 1983 and April last year, personifies the Government's nightmare — a joint revolutionary initiative by people from both of the island's communities in conflict.

What is worse, one of the Tamils indicted, Mr K. Pathmanabha, alias Ranjith, was a senior member of the Eelam People's Revolutionary Liberation Front, one of the militant Tamil separatist groups, whose policy line is more coherently Marxist than any of the others.

The conspiracy clearly got nowhere. The indictment, filed by the Attorney-General in the Colombo High Court, accuses the group of amassing arms, ammunition and explosives, of carrying out two robberies and of sending people to India for military training.

They are also said to have "incited a section of the community" to overthrow the Government by violence. In fact however, they had not even got as far as forming the Marxist political party they had talked about.

தோழ!
நம்பிக்கையோடு
நாங்களிருக்கிறோம்.
துளிர் விட்டு வரும்
பூச்செடியில்
புதிதாய் அரும்பும்
பூக்களுக்காக

சிறகு முளைத்த
இளம் பறவைகள்
சிறகடித்துப் பறக்கும்
திசைகளுக்காக

எங்களை
நெருங்கி வருகின்ற
மரணத்துக்காக
நம்பிக்கையோடு
நாங்கள்
காத்திருக்கிறோம்!

முதலாளித்துவ ஒடுக்குமுறையாளர்களுக்
-கெதிரான போராட்டத்தில் இலங்கை
பாட்டாளிகளது கரங்கள் ஒருங்கி-
ணைகின்றன.
"இறுதி வெற்றி பாட்டாளிகளுக்கே."

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சென்னை ஈழப் போராளிகளின் துப்பாக்கிச் சூடு பற்றி மேலும் சில தகவல்கள் பிற பத்திரிக்கைகளின் அவதூறுகள்

ஈழப் போராளிகளுக்கு எதிராகத் தமிழக மக்களிடையே அவதூறுகளைப் பரப்பி, அவர்களைத் தனிமைப் படுத்தி நாட்டைவிட்டு வெளியேற்றுவது; இதன் மூலம் ஜெயவர்த்தனே—ராஜீவ் —எம்ஜிஆர் ஆகிய பாசிஸ்டுகளுக்கு ஊழியஞ் செய்வதில் இப்போது முதலாளித்துவப் பத்திரிக்கைகளிடையேயும், தமிழகப் போலீசாரிடையேயும் கடும் போட்டி நடக்கிறது. இதிலே துள்ளக்கும் தி... மோகன்தாசும் தேவாரமும் முன்னணியில் நிற்கின்றனர். இந்தப் போட்டியிலும் கலந்து கொண்டு "ஆதாயம்" அடைய வேண்டும், அதே சமயம் ஈழப் போராளிகளுக்கு ஆதரவாக இருப்பதாகவும் காட்டிக் கொள்ள வேண்டும் என்று இரட்டை வேடம் போட்டு தில்லுமுல்லுகள் செய்கின்றனர் தராசு, ஜூனியர்விகடன் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் பத்திரிக்கைகளும், அரசியல் பிழைப்புவாதிகளும்.

புரட்சியும் பேசிக் கொண்டே ஈழப் போராளிகளுக்கு எதிராக அவதூறு பரப்பும் இன்னும் ஒரு கும்பலாக தன்னை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது 'மன ஓசை— கேடயம்' கும்பல்.

முழுக்க முழுக்க மோகன்தாசு—தேவாரம் கும்பலின் அறிக்கைகளையும், சமூக பாசிஸ்டு பிரபாகரனின் அவதூறுகளையும் இவர்கள் வாந்தியெடுத்துள்ளனர் என்பதுதான் உண்மை. இருளும், பொய்யும் கவ்விக் கொண்டிருந்த தமிழகத்தில் ஒரு ஒளிக்கீற்றாக உண்மையை உயர்த்திப் பிடித்தது "புதிய ஜனநாயகம்" பத்திரிக்கை மட்டும்தான். ஈழப் போராளிகள் துப்பாக்கி சூடு நடத்துவதற்கு முன்பு அவர்களது ஆத்திரத்தைத் தூண்டும் தாக்குதல் நடவடிக்கை நடந்தது என்கிற உண்மை திட்டமிட்டு மற்ற பத்திரிக்கைகளாலும் போலீசாராலும் மறைக்கப்பட்டிருக்கிறது.

சென்னை—சூளைமேடு துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி மேலும் சில ஆதார பூர்வமான தகவல்கள் கிடைத்துள்ளன.

✱ இலங்கை அகதிகளில் ஒருவனும், கடத்தல் தொழிலில் பெரும் புள்ளியுமான முருகதாஸ் என்பவன் சென்னை மேத்தா நகரில் உள்ள "தீபக் வீடியோ சென்டர்" என்கிற இடத்தை மையமாகக் கொண்டு இயங்குகிறான். போதைப்பொருள், வீடியோ மற்றும் பிறகடத்தல்வியாபாரத்தை தூள்பாலு, சுந்தரி என்றும் சுந்தரலிங்கம், மரிய பிரான்சிஸ் போன்ற கூட்டாளிகளைக் கொண்டு நடத்துகிறான். வங்கி மோசடிப் பேர்வழி, காளிமுத்துவின் உறவினன் ராபின் மெய்ன முதற்கொண்டு பெரும் கடத்தல் கூட்டத்துடனும் போலீசுடனும் நெருங்கிய தொடர்புடையது இந்தக் கும்பல்.

✱ 29.9.86 அன்று சூளைமேடு ஈழ ஆதரவு உள்ளூர் இளைஞர்கள் சிலர், முருகதாசன் சமூக விரோத செயல்களை எதிர்த்தும், ஈழப்போராளிகளுக்கு ஆதரவு கோரியும் முருகதாஸ் விட்டிற்குப் போனபோது, தகராறு ஏற்பட்டது. இளைஞர்களையும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் போராளிகளையும் வேசி மகன்கள் என்றும், விடுதலைப் புலிகளுக்குத்தான் உதவுவோம்என்றும் கூறி இளைஞர்களை சுடுவதற்குக் கூட முருகதாசின் அடியாட்கள் முயன்றனர். அறைக்குள் அவர்களைப் பூட்டிவிட்டு, பகுதி மக்களிடையே ஆவேசமாகப் பேசிவிட்டுத் தப்பி வந்து விட்டனர் இளைஞர்கள்.

✱ விஷயத்தைக் கேள்விப்பட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப்போராளிகள் சிலர் முருதாஸின் விட்டிற்குப் போய் எச்சரித்ததோடு சில கடத்தல் பொருட்களையும், 5000 ருபாயும் எடுத்து வந்தனர் (இதை ஈ.பி.ஆர்.எல்.எஃப் தலைமை மறுக்கிறது).

பிறகு நக்சல்பாரிப் புரட்சியாளர்களைஒடுக்குவதற்காகஅமைக்கப்பட்டுள்ள 'கியூ' பிரிவுபோலீஸ் எஸ்.பி. ராமானுஜத்தின் மூலமாக, துணை கமிஷனர் இருதயதாசிடமும், அண்ணாநகர் போலீசாரிடமும் புகார் செய்தனர். ஓரிரு நாட்களுக்குப்பிறகுஇருபோலீசாருடனும் சுகுமாரன் எனகிற கூட்டாளியுடனும் ஈ.பி.ஆர். எல்.எஃப் அலுவலகத்துக்கு வந்து போராளிகளை மிரட்ட முயன்றான் முருகதாஸ். பலிக்காமல் போகவே அடுத்த நாள் இன்ஸ்பெக்டர் பகவதி போலீசாருடன் வந்து அலுவலகத்தைச் சோதனையிட்டுவிட்டு மிரட்டி விட்டு சில போராளிகளைகைது செய்துகொண்டு போனார். மீண்டும் துணைக் கமிஷனரைப் போராளிகள் அணுகியபோது அங்கு அவமானப் படுத்தி, பிறகு முருகதாசுடன் சமாதானமாகப் போவதாக எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பப்பட்டனர். இதன் காரணமாகத்தான் ஈ.பி.ஆர். எல். எஃப் அலுவலகம் ஒருமாதம் மூடப்பட்டது. உள்ளூர் இளைஞர்களின் ஆதரவில் மீண்டும் திறக்கப் பட்டது.

✱ 1-11-86 அன்று சென்னை சூளைமேடு துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு முன்பு ஈழப்போராளிகளை ஆத்திரமூட்டும் நடவடிக்கைஇந்தச் சூழ்நிலையில்தான் நடந்தது. ஒரு ஆட்டோவில் வந்த ரௌடி கும்பல் கடைவீதியில் இருந்த போராளிகளில் ஒருவரின் மூக்குக் கண்ணாடியைப் பிடுங்கி வம்புச் சண்டைக்கு இழுத்தது. பிறகு ஏற்கனவே உடைத்து வைத்திருந்த சோடா பாட்டிலினாலும், கத்தியினாலும் போராளிகளின் வயிற்றில்குத்தினர்; உடம்பில் கீறினர். அருகிலிருந்த அவர்கள் விட்டுக்கு தப்பி ஓடிய போராளிகளை முத்துஎன்கிற ரௌடி தலைமையில் ஒரு கும்பல் துரத்திக் கல்லெறி, தீவைப்புஆகிய தாக்குதலில் இறங்கியது.

✱ துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு முன்பு ஈழப்போராளிகள் குத்தப்பட்டனர், தாக்கப்பட்டனர் என்பது பகுதி மக்கள் அனைவரும் சாட்சியம் சொல்லும் உண்மை. சம்பவத்தின் தொடக்கத்தைப் பார்த்தவர்கள் ஒருசிலரே. எனவே ஈழப்போராளிகளை எந்த முறையில் வம்புக்கிழுத்து, தாக்கி ஆத்திரமூட்டினர் என்பது பற்றி சில முரண்பட்ட தகவல்கள் தரப்படுகின்றன. அவற்றில் ஒன்று பட்டாசு கொளுத்திப் போட்டது, கடைகளில் மாமூல் வசூலித்துக் கொண்டிருந்த முத்து என்கிற ரௌடி தாக்கியது என்று சிலர் சொல்லுகின்றனர். ஆனால் ஆட்டோவில் வந்து வம்புகிழுத்துத் தாக்கினார்கள் என்பது நம்பிக்கைக்குரிய பகுதி மக்களாலும் போராளிகளாலும் இப்போது உறுதி செய்யப்படுகிறது.

✱ போராளிகளில் ஒருவர் தானியங்கி இயந்திரத் துப்பாக்கியுடன் வெளியே வந்து ...லே பார்த்து ...சுட்டார். அவ..மீது மோதி, துப்பாக்கியைத் ...டிவிட்டனர் சிலர். குண்டுஅவர்கையைச் சிரைத்துக் கொண்டுபோய் திருநாவுக்கரசு என்பவர் மீது பாய்ந்தது. அந்தப்பகுதி இளைஞரும், போராளிகளின் நண்பரும், "மார்க்சிஸ்ட்" கட்சி இளைஞர் அமைப்பின் சாதாரண ஆதரவாளருமான திருநாவுக்கரசு சமாதானம் செய்ய வந்து துப்பாக்கிச் சூட்டை தடுக்க முயன்றவர். அ.தி.முக.காரர் அல்ல என்பதே உண்மை.

✱ துப்பாக்கிச் சூடு நடக்கத் தொடங்கியதும் பகுதி மக்கள் கூடி ஆத்திரமுற்று தாக்குதலில் இறங்கினர். சமாதானம் செய்ய முயன்ற அதேபகுதிஇளைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டார். தாக்குதலும், துப்பாக்கிச் சூடும் நடக்கும்போது மோட்டார் சைக்கிளில் வந்த ஈ.பி.ஆர் எல்.எஃப் தளபதி டக்ளஸ் தேவானந்தம் கல்லால் தாக்கப் பட்டுபல்லுடைபட்டார். மோட்டார் சைக்கிள் தீ வைக்கப்பட்டது. ஆயுதக் குவியல் தீயிடப்பட்டால் விபரீதமாகிவிடும் என்று கருதிய போராளிகள் தொடர்ந்து வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தி கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். பிறகு வந்த போலீஸ் அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

குடித்துவிட்டு ஈழப்போராளிகள் கலாட்டா செய்ததாகவும், திருநாவுக்கரசு கோஷ்டியுடன் மோதியதாகவும், அவரை நேருக்கு நேர் சுட்டுக் கொன்றதாகவும், போலீசையே நோக்கிச் சுட்டதாகவும் ஈழப் போராளிகளுக்கு எதிராக பொய் செய்திகள் எழுதி போதனையும் செய்துள்ளது ஓடுகாலிகளின் 'கேடயம்'. ஏற்கனவே ஒரு பொய் செய்தி அடிப்படையில் ஈழப் போராளிகளைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுவதாக தலையங் தீட்டியிருந்தார்கள், ஈழப் போராளிகளுக்கு எதிராக இப்போது நிலவும் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு தொடர்ந்து அவதூறுப் பிரச்சாரம் செய்கிறார்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

எதிரியின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்குப் பலியாவதும், அப்பாவி மக்களை மிரட்டுவதற்கே ஆனாலும், துப்பாக்கி சூடு நடத்துவதும் தவறான செயலாகும் என்று நாம் கண்டிக்கிறோம். இருப்பினும், ஒரு தவறு நடப்பதற்கான காரணங்கள், சூழ்நிலைகளைப் புறக்கணித்துவிட்டு விசாரிப்பது உண்மையைக் கண்டறிய உதவாது. துப்பாக்கிச் சூடு என்கிற தவறு நடந்ததற்கான காரணங்களையும் மட்டுமல்ல, துப்பாக்கிச் சூடு நடந்த முறையையுமே மூடி மறைக்கும் செயல்களில் அந்தப் பத்திரிகைகளும் தமிழகப் போலீசாரும் ஈடுபட்டுள்ளனர். ●

# இன்குலாப் 12-86

**விடுதலைப் புலிகளை விட்டுக் காவலில் வைத்திருந்தது அவர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்று கருதுகிறீர்களா?**

அவர்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம் என்பது ஒன்று. அவர்களது போராட்டத்தை பின்னடையச் செய்வதென்பது மற்றொன்று. இது ஈழத்தில் களத்தில் நிற்கும் போராளிகளின் மனோ நிலையை குன்றயச் செய்யும் முயற்சி. யாழ்பாணப் பகுதியில் சர் , ... . நடத்துவரும் சிங்கள இராணுவத்திற்கு இது ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும்.

**அவர்கள் தமிழக மக்களிடம் நடந்து கொள்ளும் முறை பற்றி...**

சில போராளிகள் தவறிழைத்திருக்கக் கூடும். சில இடங்களில் தவறிழைத்ததாகக் கட்டுக்கதைகள் கட்டப்பட்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக சூளைமேட்டுச் சம்பவம். அங்கு போராளிகள் மீது வேண்டுமென்றே சமூக விரோதிகள் தாக்குதலை முதலில் தொடுத்திருக்கிறார்கள். இயன்ற மட்டும் பொறுமையைக் கடைபிடித்த போராளிகள் கடைசியில் அவர்கள் மீது சுட்டிருக்கிறார்கள். அந்த பகுதியிலுள்ள மக்களும் இதைச் சொல்கிறார்கள். அரிசன இளைஞர்கள் மீது ஈழபபோராளிகள் தாக்கிவிட்டதாக காவல்துறை கவலைப்பட்டு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. ஆனால் அந்த பகுதியிலுள்ள போராளிகள் சார்ந்திருககக்கூடிய EPRLF பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மககளையே உறுப்பினாகளாகக கொணடு வளாந்த இயக்கம். ஈழத்தில் அதன் பெயர் பள்ளன் கட்சி என்பதாகும். எனவே அரிசனங்கள் மீது தொடுக்கப்பட்ட தாககுதல என்பதை விட சமூக விரோதிகளுக்கும் ஈழபபோராளிகளுககும் இடையில் ஏற்பட்ட ஒரு மோதல். அதில திருநாவுககரசு என்கிற இளைஞா இறந்து போனது உண்மையிலேயே துரதிஷடவசமானது.

## போராளிகளும் கைக்கூலிகளும்...

17-12-86

"ஊருக்கு இளைத்தவன் ஈழ விடுதலைப் போராளிகள்!" என்பது இப்போது புது மொழியாகி விட்டது.

எங்கேயாவது 'பாம்' வெடித்து வி...ா? போடு அவன் தலையில் பழியை! ஏனென்றால் அவன்தானே தன் உடன் பிறவா சகோதரிகளை கற்பழித்த கயவர்களை பலி வாங்க ஆயுதமேந்தியிருக்கிறான்!

எங்கேயாவது துப்பாக்கி வெடிக்கிறதா? பிடி அவனை! அவன்தானே தமிழர்களின் உடமைகளை சூறையாடியவனுக்கு கண்ணி வைத்திருக்கிறான்?

எங்கேயாவது திருட்டு—கொள்ளை நடக்கிறதா? சந்தேகமின்றி அவன்தான். ஏனென்றால் அவன்தானே அடிமைப்பட்ட ஈழத் தாயகத்தை மீட்க சர்வபரித்தியாகத்திற்கும் தயாராக இருக்கிறான்.

புகலிடம் தேடிவந்த ஈழப் போராளிகள் மீது இப்போது இட்டுக்கட்டிய அவதூறுகளை திட்டமிட்டுப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள், தமிழ் இன உணர்வுக்கு எதிரிகள்!

ஈழப்போராளிகள் மீது தமிழக மக்களுக்கு வெறுப்பு ஏற்படச் செய்ய வேண்டுமென்பதற்காக சிங்கள கைக்கூலிகளும் ஒற்றர்களும் திட்டமிட்டு தமிழகத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை முன்பே டெலோ தளபதி மறைந்த மாவீரன் சிறீசபா ரெத்தினம் சொல்லி இருந்தார்.

அதை அலட்சிப்படுத்தியது தமிழக அரசு காவல்துறையின் உளவுப் பிரிவு! அந்த அலட்சியத்தை தனக்கு சாதகமாக சிங்கள அரசு பயன்படுத்திக் கொண்டு சில கூலி எழுத்தாளர்களின் பேனாக்களிலும் புளுகு பிரசாரத்துக்கு மை ஊற்றிக் கொடுத்திருக்கிறது.

மதுரையில் ரெயில் தண்டவாளத்தில் வெடிகுண்டு வெடித்ததும் இந்த கூலி எழுத்தாளர்கள் உடனே 'போராளிகள் சதியா?' என்று பிரசாரத்தை முடுக்கி விட்டார்கள். ஆனால் தற்செயலாக உளவாளி சிங்களர்கள் 9 பேர் பிடிபட்டதால் போராளிகள் மீது அவதூறு நீங்கியது.

விடுதலைப்புலி இயக்கத்தின் பாலசிங்கம் வீட்டுக்கு வெடி வைத்ததற்கும் இன்னும் சில வெடி வெடிப்பு சம்பவங்களுக்கும் இந்த உளவாளிகள்தான் காரணம் என்பதும் தெரிந்துவிட்டது.

சூளைமேட்டு துப்பாக்கிச் சூடு பற்றி நேரில் சென்று விசாரணை நடத்தியவர் "போராளிகள் மீது தவறில்லை, வேறு சில சமூக விரோத சக்திகள்தான் காரணம்" என்று சொல்லி விட்டார். போராளிகள் குடிப்பதில்லை. குடித்துவிட்டு ரகளை செய்வதில்லை. அவர்கள் மிக கட்டுப்பாடானவர்கள் என்று அந்தப் பகுதி மக்களே சொல்லி இருக்கிறார்கள்.

இப்படி ராணுவ ரீதியாக கட்டுப்பாடாக இயங்கிய போராளிகள் மீதுதான் தமிழக அரசின் போலீஸ் நடவடிக்கை எடுத்தது. ஆயுதங்களை பறித்தது. தொலை தொடர்பு கருவிகளை பறிமுதல் செய்துவிட்டு திரும்ப கொடுத்தது.

இதற்கெல்லாம் காரணமாக இருந்ததாக கூறப்படும் ரகசிய புலனாய்வுத்துறை டி.ஜி.பி.



போராளிகள் மீது பாய்ந்த டி. ஜி. பி. மோகன்தாஸ்

மோகன்தாஸ் சிங்கப்பூருக்கு சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார் என்றும் அரசு அனுமதி இல்லாமல் நவம்பர் மூன்றும் வாரமே போய்விட்டார் என்றும் இப்போது பத்திரிகை செய்திகள் கூறுகின்றன.

பெரிய அதிகாரி வெளிநாடு போக வேண்டும் என்றால் அரசிடம் கண்டிப்பாக அனுமதி பெற்றாக வேண்டும். அதிலும் மாவட்ட போலீஸ் அதிகாரி பதவிக்கு மேற்பட்ட பதவியில் இருப்பவர்கள் முதலமைச்சரின் அனுமதியை பெற்றாக வேண்டும். ஆனால் மோகன்தாஸ் அப்படி அனுமதி பெற்றதாக தெரியவில்லை. அனுமதி பெற்றதற்கான ரிகார்டுகளும் கிடையாது. பின் எப்படி போனார்?

முதல்-அமைச்சரை சந்திப்பதை அண்மைக்காலமாக மோகன்தாஸ் தவிர்த்து வந்திருக்கிறார்' என்றும் ஏறத்தாழ பத்தாண்டுகளாக ரகசிய போலீஸ் அதிகாரியாக இருந்து வரும் இவர் இன்னும் பதவியில் 5 ஆண்டு காலம் நீடிக்க முடியும் என்றாலும் இவர் இந்தப் பதவியிலிருந்து விலக விரும்புகிறார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆளும் கட்சியில் உள்ள இரண்டு கோஷ்டியினருக்கும் பொது எதிரி இந்த மோகன்தாஸ் தான்! ஆர். எம். வீரப்பனும் இவரை தப்பான செய்திகளை முதல்வருக்கு அனுப்பித் தருபவர் என்கிறார். எதிர் அணியினருக்கும் இவர் மீது அவநம்பிக்கை!

எல்லாம் இருக்கட்டும். இவர் எப்படி சிங்கப்பூர் போனார்? எதற்காக போனார்? ஏன் போனார்? மாநில அரசுக்கு தெரியாமல் மத்திய அரசு அனுப்பி இருக்கிறதா?

சிங்கப்பூர் பாங்கியில் எந்தெந்த தலைவர்கள் எவ்வளவு பணம் சேர்ந்து வைத்திருக்கிறார்கள் என்பதை விசாரிக்க போயிருப்பாரோ?

—'இனியன்'

www.tamilarangam.net

வன்னிவிளாங்குளம்

# மினி இராணுவமுகாம் மீது மக்கள் விடுதலைப் படை தாக்குதல்

யாழ்ப்பாணம், வெள்ளி
வன்னிவிளாங்குளம் பாடசாலை, கோயில், கோயில் மடம் ஆகியவற்றில் தற்காலிக முகாமிட்டிருந்து அப்பகுதி மக்களின் பொருள்களைச் சூறையாடியும், பெண்களுடன் தகாத முறைசேடாகவும் நடக்க ஆரம்பித்த இராணுவத்தினர் மீது கடந்த 13-ம் திகதி தமது மக்கள் விடுதலைப்படையினர் தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து இராணுவம் அந்த முகாமில் இருந்து மீண்டும் மாங்குளம் முகாமுக்குச் சென்றுவிட்டதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
மாங்குளம் இராணுவமுகாமிலிருந்து கடந்த 12ம் திகதி இரவு 300க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பல நவீன இராணுவ வாகனங்களுடன் வன்னிவிளாங்குளம் பாடசாலை, கோயில், கோயில்மடம் ஆகியவற்றில் தற்காலிக மினி முகாம் அமைத்து அந்த இடத்து மக்களின் பொருட்களை சூறையாடியும், பெண்களுடன் முறைசேடாகவும் நடக்க ஆரம்பித்தனர்,

இதையறிந்த மக்கள் விடுதலைப்படைத் தோழர்கள் 13ம் திகதி இரவு 7-30 மணியளவில் மேற்படி மினிமுகாம் மீது தாக்குதல் நடாத்தஆரம்பித்தனர்

இத்தாக்குதலின்போது நவீன மோட்டார் ஷெல்கள், கலி 50 ரக துப்பாக்கிகள், பல நவீன தானியங்கித் துப்பாக்கிகள் ஆகியவை பாவிக்கப்பட்டன. மிக உக்கிரமாக நடந்த இந்த மோதலின் பின் மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாத இராணுவத்தினர் வன்னிவிளாங்குளம் மினி முகாமில் இருந்து மீண்டும் மாங்குளம் இராணுவ முகாம் திரும்பிச் சென்றனர். இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேத விபரம் சரியாகத் தெரியவில்லை இராணுவத்தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருக்கும் என அஞ்சப்படுகின்றது

"இத்தாக்குதலின் போது இம் மண்ணின் மீட்புக்காக இறுதிவரை போராடிய மக்கள விடுதலைப் படையின் தோழர் நியூட்டன் (இ. அரசரத்தினம், தருமபுரம்) வீர மரணமடைந்தார் அவருக்கு எமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இம் மினி முகாம் அமைக்கப்பட்டதால் பதற்றம் அடைந்திருந்த அப்பிரதேச மக்கள் மீண்டும் வழமையான வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர். இத்தாக்குதலின் பின்னர் மாங்குளம் தணுக்காய் வீதியிலுள்ள இரண்டு பாலங்களும் மக்கள் விடுதலைப் படையினரால் தகர்க்கப்பட்டுள்ளன" இவ்வாறு அறிக்கை கூறுகிறது (மா

(21-11-86)

## றேகன் கொலைசெய்யப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகிறது

### ஈ.பி. ஆர்.எல். எவ்.

யாழ்ப்பாணம், ஞாயிறு
"சர்வதேசப் பாசறையில் பயிற்சிபெற்ற ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப்படையின் வன்னிப்பிராந்திய தளபதியாக செயற்பட்டுவந்த தோழர் றேகன் அராஜகவாதிகளால் கொலை செய்யப்பட்டு ஒரு வருடமாகின்றது"

இவ்வாறு ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்

மக்களால் நேசிக்கப்பட்ட அவன் மக்களுக்குச்சேவை செய்யும்போதே கொல்லப்பட்டான். கொலைகாரன், கொள்ளைக்காரன் என அநாகரிகமாக பட்டம் சூட்டப்பட்டு கொல்லப்பட்ட இவன் தனது இறுதி மூச்சுவரை தனது மக்களுக்காகவும் அவர்தம் உரிமைகளுக்காகவும் போராடியவன் அராஜகவாதிகளின் கொலைகள் தோழர் றேகனுடன் மாத்திரம் முடிந்து விடவில்லை அது இன்னும் தொடர்கதையாகவே உள்ளதானது வெட்கித் தலைகுனியவேண்டிய செயலாகும் என்பதுடன் நாகரிக சமுதாயத்தில் இப்படியான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கதுமாகும் அராஜகவாதத்தால் தோழர் றேகனின் உயிரைத்தான் போக்கமுடிந்ததே தவிர அவரது கொள்கைகளை அவர்களால் தோற்கடிக்க முடியவில்லை அராஜகவாதத்தை தோற்கடிப்பதே நாம் தோழர் றேகனுக்கு செலுத்தும் அஞ்சலியாகும்"

(23-11-86)

சம்மாந்துறை---

## பொலிஸ்நிலைய தாக்குதல் படையினர் பலர் பலி

யாழ்ப்பாணம், வெள்ளி.
சம்மாந்துறையில் உள்ள பொலிஸ் நிலையம் மீது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரின் மக்கள் விடுதலைப்படை நடத்திய தாக்குதலில் பொலிஸ்நிலையக் கட்டிடம் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;-
சம்மாந்துறை பொலிஸ்நிலையம் மீது மக்கள் விடுதலைப் படைத் தோழர்கள் நேற்று முன்தினமிரவு 11மணியளவில் தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலின் போது பொலிஸ் நிலையக்கட்டடம் முற்றாக தகர்க்கப்பட்டுள்ளது. இதில்பலர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதலின்போது அவ்விடத்திற்கு அருகிலிருந்த நான்கு ஊர்காவல்படை வீரர்களும் சுட்டுக்கொல்லப்பட்டனர். [வா]

ஓமந்தையில் ---
(1ம் பக்கத் தொடர்ச்சி)
பது இராணுவத்தினர் பலியானர். ஆறுபேர்காயமடைந்தனர்"

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கை யொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

"மக்கள் விடுதலைப் படையினர் 'கோண் சார்ஜ்' தாக்குதலாலும் நேரடி மோட்டார், துப்பாக்கிப் பிரயோகத்தாலும் தாக்குதல் மேற்கொண்டனர் இத்தாக்குதலின் போது ஒன்பது இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் ஆறுபேர் படுகாயமடைந்தனர் ஜீப் வண்டி முற்றாக சேதமாக்கப்பட்டது இத்தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவித இழப்பும் இல்லை. இச்சம்பவம் ஓமந்தை முகாமிற்கு அருகாமையில் மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது." (எ)

ஓமந்தையில்

## நேரடித்தாக்குதலில் 9 இராணுவம் பலி

(30-11-86)

யாழ்ப்பாணம், ஞாயிறு ஈ. பி. ஆர் எல். எவ்
"ஓமந்தை இராணுவ முன்னணியின் மக்கள் விடுமுகாமிலிருந்து ரோந்து தலைப்படையினர் தாக்குதல் சென்ற படையினர் மீது ஈழ மேற்கொண்ட போது ஒன் மக்கள் புரட்சிகர விடுதலை (11ம் பக்கம் பார்க்க)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(04-12-86)

# "குருதியுறைந்த நம் தேசத்தில் குண்டர்களின் அடக்குமுறை"

## யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு

யாழ்ப்பாணம், செவ்வாய்

"சிறிலங்கா அரசுதான் இதுவரைக்கும் குண்டர்களைப் பாவித்துப் போராட்டத்தை அடக்க முற்பட்டது. ஆனால் இன்று தியாகிகளின் குருதியுறைந்த நம் தேசத்து மண்ணிலே அந்த அனுகுமுறையில் அடக்குமுறை தொடர்கிறது. இந்தக் குண்டர்களை யார் உருவாக்குகிறார்கள்? உண்மைக்கு மேடையோ, அல்லது வெளிச்சமோ போட்டுக் காட்டவேண்டிய தேவையில்லை".

மட்டுவில் மகா வித்தியாலயம், இருபாலை ஆகிய இடங்களில் பாத யாத்திரிகர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் குறித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மாணவனின் நிலை கவலைக்கிடம்

அந்த அறிக்கையில் மேலும், "மட்டுவில் மகா வித்தியாலயத்தின் பாத யாத்திரிகர்கள் மீது நடைபெற்ற தாக்குதலில் காயமுற்ற நான்கு மாணவர்களில் எஸ். சந்திரகுமார் (உயிரியல் பீடம் 2-ம் வருடம்) என்பவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

"மட்டுவிலில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் இருபதாயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட பாடசாலைச் சொத்துக்களும், ஒலிபெருக்கிக் கருவிகளும், மாணவர் உடைமைகளும் சேதமாக்கப்பட்டன" என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இருபாலையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நாளை மறுதினம் வியாழக்கிழமை மாபெரும் கண்டனப் பொதுக் கூட்டமொன்றினைக் கோப்பாயில் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா)

# "அராஜகத்தை எதிர்த்து ஜனநாயகத்தை நிலைநிறுத்தவே எமது போராட்டம்"

## — பல்கலைக்கழக அமைப்புக் குழு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"அராஜகமானது ஆங்கில, சிங்கள ஏன் தமிழ் மேலாதிக்க வடிவில் வந்தாலும் அதனையும் எதிர்த்து மக்களின் ஜனநாயகத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகவே எமது போராட்டமென்பதை மக்களிடம் மரண யாத்திரையின் மூலமாவது விடிவுகிட்டும் என்ற உறுதிபடப் போராடும் போராளிகளில் இலட்சியங்களின் மீது ஆணையிட்டு கூறுகிறோம்"

இவ்வாறு யாழ். பல்கலைக் மாணவர் அமைப்புக்குழு சார்பில் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது"

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"சிறிலங்கா அரசு கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட அரசபயங்கரவாதத்தினால் மக்கள் அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர்

"யாழ். பல்கலைக்கழக மாணவர்களுடன் மக்கள் இணைந்து சிறிலங்கா அரசுக்கெதிராகவும் ஈழத்தில் ஜனநாயகத்துக்காகவும் போராட வேண்டும். இதைவிடுத்து எமது போராட்டத்தை தமிழ் ஈழத்திற்கெதிரானதாகக் காட்ட முயலும் சில தீயசக்திகள் எமது நியாயமான ஜனநாயகப் போராட்டத்தை ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு எமது போராட்டத்துக்கு எதிரான சில நடவடிக்கைகளையும் பிரச்சாரங்களையும் சில வெளியீடுகளையும் வெளியிடுவதன் மூலம் மக்களைத் திசைதிருப்பி எமது போராட்டத்தின் அடிப்படை உரிமைகளை மறுக்க சதி செய்கின்றன"

போராட்டத்தை ஆதரிக்கும் இந்த நிலையில் எமது நியாயமான சிறிலங்கா அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவும் போராட வேண்டும். எமது போராட்டத்தின் நோக்கமானது உள்நாட்டில் மக்களின் அடிப்படை உரிமையான ஜனநாயகத்திற்கானதே. இதன் அடிப்படையில் எமது சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ள ஆறு போராளிகளும் ஜனநாயகத்தை நேசித்து இப்போராட்டத்தை முன்னெடுத்துக்கொண்டிருக்கும் ஏனைய மாணவர்களும், அராஜகமெனும் பெரும் அரக்கனுக்கெதிராக எமது உயிர்களைத் துச்சமென மதித்துப் போராடிக்கொண்டிருக்கின்றோம்.

"எமது இப்போராட்டத்தின் நோக்கத்தையும் எமது உணர்வுகளையும் மனிதாபிமான அடிப்படையில் மதிக்கத் தவறின் அராஜகம் எனும் அரக்கனால் எமது உயிர்கள் பறிபோவது திண்ணம்

எனவே எமது மக்கள் எதிர்களைப் புரிந்து எங்கள் போராட்டத்தின் நோக்கத்தை மதித்து எந்தவிதமான அடக்குமுறைகளுக்கும் ஜனநாயக மீறல்களுக்கும் அராஜகவாதிகளுக்கும் அடிபணியாமல் நாங்கள் பேசவேண்டும்! எழுதவேண்டும்! வாழவேண்டும்! என்ற ஜீவாதார உரிமைகளின் அடிப்படையிலே போராடப் புறப்பட்ட எம்மோடு சேர்ந்து போராடி எமது ஜனநாயக உரிமைகளையும் நிலைநிறுத்திக்கொள்ளவேண்டும்.

(23-11-86)

# பல். மாணவன் கடத்தல்; ஈ.பி.ஆர்.எல்.எவ். கண்டனம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். பல்கலைக்கழக மாணவன் அவிஜிதரன் கடத்தப்பட்டதுக்கும் தமக்கும் எதுவித சம்பந்தமுமில்லை என்றும் இதனை தாம் வன்மையாகக் கண்டிப்பதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக ஈ.பி.ஆர்.எல்.எவ். விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இவ்விடயம் சம்பந்தமாக மாணவர்கள் நடத்தும்போராட்டத்திற்கு ஆதரவை வழங்குகிறோம் ஏனைய பிரதேசங்களிலிருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் கல்விகற்க வரும் மாணவர்களுக்கு யாழ் மக்களும் விடுதலை ஸ்தாபனங்களும் பாதுகாப்பு வழங்க வேண்டியது கடமை என்பதை வலியுறுத்துகிறோம்.

ஏற்கனவே நிலவிவரும் பிரதேச முரண்பாடுகள் இது போன்ற நடவடிக்கைகளினால் மேலும் கூர்மையடையும் இதனை விடுதலையில் நேசமுள்ள யாவரும் புரிந்துகொண்டு செயற்படவேண்டியது அவசியமாகும். (மா)

(08-11-86)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மட்டு. நகரில் ராணுவம்மீது பி.எல்.ஏ. 'கோன்சார்ஜ்' தாக்குதல்

## நான்கு பேர் பலி; நாலவர் காயம்

யாழ்ப்பாணம், புதன். மட்டுநகர் இபோச டிப்போவுக்கு அருகாமையில் இராணுவத் தொடர்வண்டி மீது தமது மக்கள் விடுதலைப் படை 'கோன்சார்ஜ்' தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவத்தரப்பில் 4 பேர் கொல்லப்பட்டனர் 4 பேர் காயமடைந்தனர் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணி அறிவித்துள்ளது.

இச்சம்பவம் குறித்து ஈபிஆர் எல் எவ் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"மட்டுநகர் இபோச பஸ் டிப்போவுக்கு அருகாமையில் கடந்த 31ம் திகதி பிற்பகல் சென்று கொண்டிருந்த இஸ்ரேல் தயாரிப்பு கவசவாகன தொடர்வண்டி மீது மக்கள் விடுதலைப்படை 'கோன்சார்ஜ்' வெடிக்கச்செய்து உக்கிரமாக தாக்குதல் நடத்தினர்.

அடுத்த நாள் 1ம் திகதி பிற்பகல் சரடியனாறுமுகாமிலிருந்த உன்னிச்சையை நோக்கி எமதுமக்களை அழிக்கும் நோக்குடன் வந்து கொண்டிருந்த இராணுவத் தொடர்வண்டிமீது "கோன்சார்ஜ்" தாக்குதல் மேற்கொண்டபோது ஒரு ட்ரக் முற்றாக சேதமாக்கப்பட்டது. அதில் சென்ற ஐந்து இராணுவமும் கொல்லப்பட்டனர். மேலும் இன்னுமோர் 'ட்ரக்' பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. தொடர்ந்து இராணுவத்தினருடன் எமது தோழர்கள் நேரடிச்சமரில் ஈடுபட்டனர். இத்தாக்குதலில் 5 இராணுவத்தினர் ஸ்தலத்திலே மாண்டனர் 13 [illegible] படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதலுக்கு உதவியாக சரடியனாறு முகாமிலிருந்து 100க்கு மேற்பட்ட இராணுவத்தினர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வந்து அருகிலுள்ள கட்டடம் ஒன்றினுள் நுழைந்து மினிமுகாம் இட்டனர். இம்மினிமுகாம் மீது பிற்பகல் 7-30 மணியளவில் எமது மக்கள் விடுதலைப்படை வீரர்கள் உக்கிரமாகத் தாக்கினர். இத்தாக்குதலில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமுற்றனர்.

மட்டுநகர் கொக்கட்டிச்சோலையில் அமைக்கப்பட்ட இராணுவ மினிமுகாம் மீது எமது மக்கள் விடுதலைப்படையினால் கடந்த 2ம் திகதி இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயமடைந்தனர். எமதுதரப்பில் எவ்வித இழப்புக்களும் இல்லை. [மா]

(05-11-86)

(22-11-86)

# மக்கள் விடுதலைப் படையின் தாக்குதலுக்கு 6 இராணுவம் பலி

யாழ்ப்பாணம், சனி. முல்லைத்தீவு மாவட்டத்தில் தமது மக்கள் விடுதலைப்படை நடத்திய தாக்குதலில் ஒரு கவசவண்டியும் ஒரு ஜீப்வண்டியும் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதிலிருந்த 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் தமது தரப்பில் ஒரு போராளி பலியானதாகவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்டத்தில் 24 மணிநேர ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய ஸ்ரீலங்கா அரசின் பட்டாளங்கள் நேற்றுக்காலை பதவியா, கென்பாம், டொலர்பாம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆகிய இராணுவ முகாம்களிலிருந்து ஒரே சமயத்தில் தமது திட்டமிட்ட தாக்குதலை நடத்த வெளியே வந்துள்ளனர்.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் மினி முகாம் அமைக்கும் நோக்கில் 8 கவச வண்டிகளிலும் 1 ஜீப் வண்டியிலும் வந்த இராணுவத்தினரை எதிர்த்து எமது மக்கள் விடுதலைப்படை நேற்றுக் காலை ஆறுமணியிலிருந்து எதிர்த் தாக்குதல் நடாத்திக் கொண்டிருக்கிறது. இராணுவத்தினருக்கு உதவியாக 2 ஹெலிகொப்டர்கள் 1 பொம்பர் என்பன தாக்குதல் நடாத்தின. மக்கள் விடுதலைப்படை நடாத்திய தாக்குதலால் ஒரு கவசவண்டியும் ஜீப் வண்டி ஒன்றும் முற்றாக சேதமடைந்துள்ளது. இதிலிருந்த 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தினருக்கு எதிரான சமரில் மக்கள் விடுதலைப்படைத் தோழர் முகுந்தன் (சந்திரசேகரம்) வீரமரணமடைந்துள்ளார். இராணுவத்தினர் நடத்திய தாக்குதலால் 4 பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவ முகாமில் சுமார் 2000 இராணுவத்தினரும் இராணுவத் தளபாடங்களும் குவிக்கப்படுகின்றன. முல்லைத்தீவு கரையோரத்திலும் செம்மலைப் பகுதியிலும் இவ்விரண்டு பீரங்கிப்படகுகள் தாக்குதல் நடத்தியவண்ணமுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ள இராணுவத்தினரின் தாக்குதலை எதிர்த்து இறுதிவரை மக்கள் விடுதலைப்படை போரிட்டுவருகிறது. (மா)

## முல்லை மாவட்டம்: ஜீப்பில் சென்ற

# இராணுவம் மீது மக்கள் விடுதலைப்படை தாக்குதல்

## (23-10-86) ஆறு சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், வியா. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஜீப்வண்டியொன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தமது இராணுவப் பிரிவாகிய மக்கள் விடுதலைப் படையினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் 6 சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாகவும் இருவர் பலத்த காயங்களுக்குள்ளானதாகவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

கடந்த 19ம் திகதி இரவு நடைபெற்ற சம்பவம் குறித்த ஈ.பி.ஆர்.எல்.எவ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"கடந்த 19ம் திகதி இரவு 7 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள டொலர்பாம் இராணுவ முகாமில் இருந்து முந்தாகைக்குள இராணுவ முகாமிற்கு ஜீப் வண்டியொன்றில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது எமது இராணுவப்பிரிவாகிய மக்கள் விடுதலைப்படைத் தோழர்களால் பலத்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த ஒன்றரை மணிநேர துப்பாக்கிச் சமரின்பின் இராணுவத்தினர் பலத்த இழப்புகளுடன் பின்வாங்கினர். எமது தரப்பில் எதுவித சேதங்களோ இழப்புகளோ ஏற்படவில்லை". (மா)

(26-11-86)

# நம்பிக்கை மோசடி குறித்து வழக்குத் தாக்கல்

பருத்தித்துறை, செவ். வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கூறி 37,000 ரூபா பணத்தைப்பெற்று நம்பிக்கை மோசடி செய்த ஒருவருக்கு எதிராக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈழ தேசவிழிப்புமன்றத்தினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அச்சுவேலி வரணியைச் சேர்ந்த எம். தியாகராசா என்பவரே இந்நம்பிக்கை மோசடி வழக்கைத்தாக்கல் செய்தவராவார். இந்நம்பிக்கைமோசடி வழக்கில் எதிரி பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டிற்கு அனுப்பும் முகவர் அல்ல என்றும் இவர் போலி விமான டிக்கெற்றைக்காட்டியே நம்பிக்கை மோசடி செய்தாரென்றும் வழக்காளி வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நம்பிக்கை மோசடி வழக்கு இம்மாதம் 29ம் திகதி விசாரணை செய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஈ.பி.ஆர்.எல்.எவ்

# போராளி மரணம்

ஒட்டுசுட்டான், வியா. மக்கள் விடுதலைப் படை (ஈ. பி. ஆர். எல். எவ்) போராளி சுபேந்திரா அரச படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் முல்லைத்தீவில் இருந்து திருகோணமலைக்குப் போகும் வழியில் பதவியாவில் வைத்து இராணுவத்தினரால் சுடப்பட்டு மரணமானார்.

இவரின் சடலம் உடையார் கட்டிற்குக் கொண்டுவரப்பட்டு கடந்த புதன்கிழமை இறுதி அஞ்சலி செலுத்திய பின் தகனம் செய்யப்பட்டது.

(28-11-86)

EPIC தரும் ஈழச்செய்திகளை தொலை-பேசியிலும் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் --

031. 587995.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இலங்கையரசின்

# புதிய பிரேரணைகள் முன்னையதைவிட பின்னடைவானதாக உள்ளன

### —ஈ. பி. ஆர். எல். எவ். விளக்கம்

யாழ்ப்பாணம் சனி

இலங்கை அரசினால் கடைசியாக முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் முன்னைய பிரேரணைகளிலும் பார்க்க முன்னேற்றமாக அமைவதற்குப் பதிலாக பின்னடைவானதாகவே அமைந்துள்ளன. ஏனெனில் தொடர்ந்தும் அவை வடக்கையும் கிழக்கையும் தனித்தனி இரு மாகாணங்களாகக் குறிப்பிடுவது மாத்திரமல்லாமல் கிழக்கு மாகாணத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கவும் முற்படுகிறது.

இவ்வாறு பெங்களூரில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அண்மையில் பெங்களூரில் ஸ்ரீலங்கா, இந்திய, தமிழ்நாடு மாநில அரசுகளுக்கிடையிலும் தமிழீழ விடுதலைப் புலிகளிற்குமிடையிலும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் நாம் கலந்துகொள்ளாததன் காரணமாக அங்கு முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின் தன்மையை அதன் உள்ளடக்கத்தை அறிய முடியாதவர்களாக இருக்கின்றோம். இருப்பினும் செய்தித் தொடர்பு சாதனங்கள் வாயிலாக கடைசியாக முன்வைக்கப்பட்ட பிரேரணைகள் என்பதுபற்றி எமது கருத்துக்களை நாம்தர விரும்புகின்றோம்.

ஈழ தேசிய விடுதலை முன்னணியினால் நவம்பர் 3ந் திகதி தமிழ்நாடு முதலமைச்சர் ஊடாக இந்திய அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பேரம்பேசமுடியாத அடிப்படைக் கோரிக்கைகள் என முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பற்றி இப்பிரேரணைகளின் தொகுதியில் எதுவுமே கிடையாது.

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் உள்ள தமிழ்ப்பிரதேசங்களை வரையறை செய்யும் கடமையை எல்லைநிர்ணய ஆணைக்குழுவொன்றிற்கு கையளிப்பது என்ற யோசனை சரித்திரத்தை மாற்றி எழுத முற்படுகின்ற ஒரு செயல் என்பதை தெளிவாக்குவது மாத்திரமன்றி, ஈழமக்களுக்கு பாதகமான முறையில் எமது தாயகத்தின் பிரதேச அமைப்பினை மாற்றியமைப்பது மாத்திரமன்றி ஒருமைப்பாட்டையும் தொடர்பினையும் இல்லாமல் செய்ய முற்படுவதுடன் அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத்திட்டத்தினை சட்டபூர்வமானதாக்கவும் முயல்கிறது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்களையும், அவர்கள் பல தலைமுறையாக வளர்க்கப்பட்டு அவர்களின் வாழ்நிலமாக கருதப்பட்ட பிரதேசங்களை தவிர்த்து இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது என்பதனை நாம் மீண்டும் மீண்டும் பலமுறை வலியுறுத்தி வந்துள்ளோம்.

ஜே. ஆர். அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கத்தின் நல்லெண்ணத்தின் மூலமாக நேரடி பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஈடுபட்ட காரணத்திற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோ, தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஏனைய விடுதலை இயக்கங்களோ தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏகபிரதிநியாக தமிழர் விடுதலைக் கூட்டணியை ஏற்றுக்கொண்டது கிடையாது.

# "போராட்டத்தை வெற்றிபெறச்செய்ய அனைத்து இயக்கங்களும் ஒன்றுபடவேண்டும்"

*17—11—1986* — ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், திங்கள்

'மலையக மக்களின் பேச்சுரிமை, எழுத்துரிமை, குடியுரிமை 1948-ம் ஆண்டு ஸ்ரீலங்கா அரசினால் பறிக்கப்பட்டது. ஆனால் அதே உரிமைகள் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களிலே வாழுகின்ற மக்களிடமிருந்து பறிக்கப்பட்டுள்ளது:'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த சுரேஷ் தெரிவித்தார்.

ஈழம் தபால் முத்திரையின் இரண்டாவது வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:-

''வடக்கு-கிழக்கிலே வாழ்கின்ற மக்கள் சுதந்திரமாகப் பேச, எழுத முடியாத நிலையில் தான் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இந்த சுதந்திரமற்ற நிலையில் வாழ எந்தமக்களும் விரும்பமாட்டார்கள்.

துப்பாக்கி ஏந்தியவர்கள் எதையும் செய்யலாம் யாரும் கேட்கமாட்டார்கள் என்ற நிலையில் இங்கு யாவும் நடக்கிறது. இது இன்னொரு அடக்குமுறையாகவே நாங்கள் கருது

(5ம் பக்கம் பார்க்க)

## அனைத்து...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கிறோம். எந்த அடக்குமுறைக்கும் நாம் அஞ்சப்போவதில்லை. சகல அடக்குமுறைகளிலிருந்து விடுபட்டு எமது மக்கள் சுதந்திரமாக மகிழ்ச்சியாக வாழ்வதற்கு நாம் இறுதிவரை போராடுவோம்.

தனித்து நின்று போராடி ஈழவிடுதலைப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்யலாம் என்று கருதுவது தவறு. அனைத்து விடுதலை இயக்கங்களும் ஒன்றுபடுவதன் மூலம் எமது போராட்டத்தை வெற்றியடையச் செய்யலாம். நாங்கள் எல்லோரும் ஓர் ஐக்கிய முன்னணியின் கீழ் ஒன்றுபட்டு ஒரே கருத்தில் இருந்தால் இந்திய அரசோ இலங்கை அரசோ எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் விடுதலை இயக்கங்களுக்கிடையேயான ஐக்கியத்திற்காக ஆரம்பத்திலிருந்தே உழைத்து வந்துள்ளது. எமது தோழர்கள் இன்னொரு இயக்கத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்டபோது கூட இயக்கங்களிடையேயான ஐக்கியத்தை கருத்தில் கொண்டு எமது துப்பாக்கிகளைப் பதித்துப் பிடித்து வந்திருக்கிறோம். இன்றுகூட எமக்குள் ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படவேண்டுமென்பதில் உறுதியாக உள்ளோம்.''

பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்ட இம்முத்திரை வெளியீட்டுவிழாவில் பல்வேறு ஜன அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு கருத்துரைகள் வழங்கினார்கள்.

விழாவின் இறுதியில் மலையக மக்களின் வாழ்வை பிரதிபலிக்கும் ''தேசியம் பாடும் முகாரிகள்'' என்னும் கவிதா நிகழ்வு இடம்பெற்றது.

---

இருளைக் கிழித்து ஒளியைப் பிரசவிப்பதற்கான
ஈழப் போராட்டம் தொடர்கிறது...
உக்கிரமாக ... மிக உக்கிரமாக ...
உன்னதமான எங்கள் போராளிகளும்
உறுதி வாய்ந்த எங்கள் மக்களும்
நிச்சயம் விடியலை வென்றெடுப்பார்கள்.

---

வெளியீடு: ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (சுவிஸ் பிரிவு)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(11-12-86)

★ எந்தவொரு மனிதனும்

# தான் விரும்பும் அமைப்புடன் இணைவதை எவரும் தடுக்கமுடியாது

திருநெல்வேலி, வியாழன்

"எந்தவொரு தனி மனிதனும் தான் விரும்பும் கொள்கையை தனது கருத்தைக் கொண்ட அமைப்புகளுடன் இணைவதையும், எடுத்துக்கூறுவதையும் எந்தவொரு அராஜக நடவடிக்கையாலும், எந்தச் சக்தியாலும் தடுத்துவிடவோ அழித்துவிடவோ முடியாது" என்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் ஈசன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; 'ஆயுதங்களின் தொகையில்தான் ஒரு நாட்டின் அல்லது இனத்தின் வெற்றி தங்கியிருக்கவில்லை அப்படித் தங்கியிருக்குமாயின் அமெரிக்காவே இன்று உலகில் ஆட்சி செலுத்தும்.

ஆயுத பலத்தால், ஆயுதமுனையில் தவறுகளுக்குத் தீர்வு காண நாம் என்றுமே முற்படவில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனக்கென ஒரு அரசியல் கோட்பாட்டைக் கொண்டு, உழைக்கும் மக்கள் பலத்தில் வளர்ந்து வருகிறது. உலகில் முதலாளித்துவ சிந்தனையுள்ள அமைப்புகளும் அதற்கெதிரான சோசலிச கொள்கையுடைய அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன" என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மனித உரிமைகள் வெகுஜன ஸ்தாபனம், பல்கலைக்கழக சலாசாரகுழு, கிராமிய தொழிலாளர் சங்கம், ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகுழு போன்றவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். (ந)

(16-11-86)

'எழுக மலையகம முத்திரை' வெளியீட்டு விழா

## பொருளாதாரத்தின் பெரும்பகுதி மலையக மக்களில்தான் தங்கியுள்ளது

### இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு. இந்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக் கின்றது மலையகத் தொழிலாளர் வர்க்கத்தின் அம்மக்களுக்கு அரசு செய்த பெருந்துரோக குடியுரிமையைப் பறித்தது மாகும்"

(12 ம் பக்கம் பார்க்க)

மலையக----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் நேற்று மாலை வெளியிடப்பட்ட "எழுக மலையகம் முத்திரை" வெளியீட்டுவிழாவில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் திரு எச். என். பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

நாவலர் கலாச்சார மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த பிரதிநிதி இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

மலையகக்கவிஞர் மாத்தளை ஆ. இராசலிங்கம் எழுக மலையகம் முத்திரையை திரைநீக்கம் செய்து வெளியிட்டு வைத்தார்.


தொடர்ந்து உரையாற்றிய திரு எச். என். பெர்னாண்டோ மேலும் கூறியதாவது:

தமிழ் இளைஞர்களின் ஈழப் போராட்டத்தை அந்நிய நாடுகளின் கடன் உதவியுடன் நசுக்குவதற்குரிய வகையில் அரசு வரவு செலவுதிட்டம் தயாரித்துள்ளது. வடக்குக் கிழக்கில் மனிதப்படுகொலைகளைச் செய்வதுடன் அவர்களின் உடமைகளையும் தினமும் நாசமாக்கி வருகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதி தனதுரையில் நாம் முன்னெடுத்துள்ள ஈழப்போராட்டமானது தேசத்தின் எல்லையைக் குறிப்பதற்காகவோ முத்திரைகளைப் பதிப்பதற்காகவோ கொடிகளை நாட்டுவதற்காகவோ அல்ல இந்த மண்ணில் வாழுகின்ற மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழவேண்டும் என்பதற்காக சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவதற்காகவே நாம் போராடுகின்றோம் என்றும் கூறினார். (வா)

## ஈழம் தபால் அட்டை வெளியீடு

(12-12-86)




யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் குடாநாட்டின் சிவில் நிர்வாகங்களுக்குள் சிறந்த வெற்றியைத் தந்த ஈழம்தபால் சேவையானது தனது மூன்றாவது வெளியீடாக ஈழம் தபால் அட்டைகளை வெளியிட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஐம்பது சதம் பெறுமதியுள்ள இத்தபால் அட்டைகள் யாழ். குடாநாட்டிற்குள் மட்டும் செல்லுபடியாகும். இவ்வட்டைகள் சகல தனியார் கடைகளிலும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழம் தபால் சேவையானது குடாநாட்டினுள் வெற்றியளித்தமைக்கு மக்களின் ஒத்துழைப்பே காரணமாகும் என்றும் தொடர்ந்தும் இந்த ஒத்துழைப்பை நல்குமாறும் ஈ. பி. ஆர். எல். எவ். வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்
## EELAM PEOPLE'S INFORMATION CENTRE

B.M. BOX 1738,
LONDON WC1N 3XX,

POST BAG 5551,
MADRAS - 600 094,


## சூளைமேடு சம்பவத்துக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு:

# சமூக விரோதிகளுக்கு தமிழகத்தில் பயிற்சி

## ஈ.பி.ஆர்.எல்.எப். திடுக்கிடும் தகவல்!!

தினத்தூது 18-12-86

சென்னை, டிச. 18

சூளைமேடு துப்பாக்கிச் சூடு சம்பவத்துக்கு விடுதலைப்புலிகள் இயக்கமே முழுப் பொறுப்பு. அவர்கள் சமூக விரோத சக்திகளுக்கு தமிழ்நாட்டில் பயிற்சி கொடுக்கிறார்கள்; இந்தியாவுக்கு விரோதமாக செயல்படுகிறார்கள் என்று ஈ.பி.ஆர்.எல்.எப். குற்றம் சாட்டியுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) இயக்கத்தின் சார்பில் கேதீஸ்வரன், வரதராஜ பெருமாள் ஆகியோர் நேற்று சென்னையில் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த தீபாவளி தினத்தன்று சென்னை சூளைமேட்டில் எங்கள் இயக்கத்தினர் தாக்கப்பட்டனர். நாங்கள் வசித்து வந்த வீட்டை கொளுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இதைத் தொடர்ந்து எங்கள் இயக்கத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார்.

இந்த சம்பவத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமே முழுப் பொறுப்பு. விடுதலைப்புலிகள் திட்டமிட்டு, சில குண்டர்களை எங்கள் மீது ஏவிவிட்டு கலகத்தை ஆரம்பித்து வைத்தார்கள். பின்னர் குண்டர்கள் தப்பியோடி விட்டனர்.

இப்படித்தான் சூளைமேட்டில் கலவரம் ஏற்பட்டது.

இந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தை எங்கள் இயக்கம் நியாயம் கற்பிக்க முயலவில்லை. ஆனால் அன்று நடந்த வன்முறைக்கு விடுதலைப்புலிகள் இயக்கம்தான் காரணம்.

தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகள் இயக்கம் சில பயிற்சி முகாம்களை நடத்தி வருகிறது. அவற்றில் தேச விரோதிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த குண்டர்களுக்கு கொரில்லாத் தாக்குதல் கற்றுத் தரப்படுகிறது. விடுதலைப்புலிகள் வெளிப் பகட்டுக்கு இந்திய ஆதரவு நிலை எடுத்திருப்பது போல் காட்டிக்கொண்ட போதிலும், இத்தகைய ஆயுதப் பயிற்சிகளை இந்திய அரசு உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பதாக தெரிகிறது.

விடுதலைப்புலிகள் [illegible] சக்திகளை ஊக்கப்படுத்துகின்றன.

உண்மையில் அவர்களுக்கு ஈழ மக்கள் மத்தியில் ஆதரவு கிடையாது.

அவர்கள் ஈழப் போராட்டத்துக்கு மட்டுமல்ல! இந்தியாவின் சுதந்திரத்துக்கும் அதன் பாதுகாப்புக்கும் எதிரிகளே!

### இஸ்ரேல் ஆயுத சப்ளை

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இருக்கும் ஆயுதங்கள் ஏகாதிபத்திய (நேட்டோ) ராணுவக் கூட்டணி நாடுகளிடமிருந்து பெறப்பட்டவை.

ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற இஸ்ரேல் போன்ற நாடுகளிடமிருந்து விடுதலைப்புலிகள் தொடர்ந்து ஆயுதங்கள் பெறுகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் இதே இஸ்ரேல் நாடுதான் தமிழீழ போராட்டத்தை நசுக்க ஜெயவர்த்தனா அரசுக்கும் நவீன ரக ஆயுதங்களையும் சப்ளை செய்து வருகிறது.

### டெலோவுக்கு நேர்ந்தகதி

கடந்த மே மாதம் இந்தியாவின் சமரச முயற்சிகளுக்கு ஆதரவாக இருந்த காரணத்[illegible] இயக்கம், விடுதலைப்புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இப்போது இந்தியாவின் சமரச முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுப்பதால் எங்கள் இயக்கத்தின் மீதும் அவர்கள் தாக்குதல் தொடங்கியிருக்கிறார்கள்.

இந்திய அரசு எடுத்து வரும் சமரச முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவு கொடுத்து வருகிறோம். நாங்கள் மட்டுமல்ல, எங்கள் ஈழ மக்களும் இந்தியாவின் நண்பர்கள்தான்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(11-12-86)

★ எந்தவொரு மனிதனும்

# தான் விரும்பும் அமைப்புடன் இணைவதை எவரும் தடுக்கமுடியாது

திருநெல்வேலி, வியாழன்

"எந்தவொரு தனி மனிதனும் தான் விரும்பும் கொள்கையை தனது கருத்தைக் கொண்ட அமைப்புகளுடன் இணைவதையும், எடுத்துக்கூறுவதையும் எந்தவொரு அராஜக நடவடிக்கையாலும், எந்தச் சக்தியாலும் தடுத்துவிடவோ அழித்துவிடவோ முடியாது" என்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தினக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர் ஈசன் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; "ஆயுதங்களின் தொகையில்தான் ஒரு நாட்டின் அல்லது இனத்தின் வெற்றி தங்கியிருக்கவில்லை. அப்படித் தங்கியிருக்குமாயின் அமெரிக்காவே இன்று உலகில் ஆட்சி செலுத்தும். ஆயுத பலத்தால், ஆயுத முனையில் தவறுகளுக்குத் தீர்வு காண நாம் என்றுமே முற்படவில்லை. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனக்கென ஒரு அரசியல் கோட்பாட்டைக் கொண்டு உழைக்கும் மக்களின் பலத்தில் வளர்ந்து வருகிறது. உலகில் முதலாளித்துவ சிந்தனையுள்ள அமைப்புகளும் அதற்கெதிரான சோசலிஸ கொள்கையுடைய அமைப்புகளும் செயல்பட்டு வருகின்றன" என்றும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மனித உரிமைகள் வெகுஜன ஸ்தாபனம், பல்கலைக்கழக கலாசாரகுழு, கிராமிய தொழிலாளர் சங்கம், ஈழப் பெண்கள் விடுதலை முன்னணி, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகுழு போன்றவற்றின் பிரதிநிதிகளும் உரையாற்றினார்கள். (ந)

---

(16-11-86)

'எழுக மலையகம முத்திரை' வெளியீட்டு விழா

## பொருளாதாரத்தின் பெரும்பகுதி மலையக மக்களில்தான் தங்கியுள்ளது


### இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு. இந்நாட்டின் பொருளாதாரத்தில் பெரும்பங்கு வகிக்கும் மலையகத் தொழிலாளர் வர்க்கத்தின் குடியுரிமையைப் பறித்தது அரசு செய்த பெருந்துரோகமாகும்'' அம்மக்களுக்கு (12 ம் பக்கம் பார்க்க)

---

(12-12-86)

## ஈழம் தபால் அட்டை வெளியீடு




யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ் குடாநாட்டின் சிவில் நிர்வாகங்களுக்குள் சிறந்த வெற்றியைத் தந்த ஈழம் தபால் சேவையானது தனது [illegible]வது வெளியீடாக ஈழம் தபால் அட்டைகளை வெளியிட்டுள்ளதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

ஐம்பது சதம் பெறுமதியுள்ள இத்தபால் அட்டைகள் யாழ். குடாநாட்டிற்குள் மட்டும் செல்லுபடியாகும். இவ்வட்டைகள் சகல தனியார் கடைகளிலும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஈழம் தபால் சேவையானது குடாநாட்டினுள் வெற்றியளித்தமைக்கு மக்களின் ஒத்துழைப்பே காரணமாகும் என்றும் தொடர்ந்தும் இந்த ஒத்துழைப்பை நல்குமாறும் ஈ.பி.ஆர்.எல்.எவ். வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ)

---

மலையக----

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினரால் நேற்று மாலை வெளியிடப்பட்ட "எழுக மலையகம் முத்திரை" வெளியீட்டு விழாவில் உரையாற்றிய இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் திரு எச். என். பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

நாவலர் கலாச்சார மண்டபத்தில் இவ்விழா நடைபெற்றது. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை சேர்ந்த பிரதிநிதி இவ்வைபவத்திற்குத் தலைமை வகித்தார்.

மலையகக் கவிஞர் மாத்தளை ஆ. இராசலிங்கம் எழுக மலையகம் முத்திரையை திரைநீக்கம் செய்து வெளியிட்டு வைத்தார்.

தொடர்ந்து உரையாற்றிய திரு எச். என். பெர்னாண்டோ மேலும் கூறியதாவது:

தமிழ் இளைஞர்களின் ஈழப் போராட்டத்தை அந்நிய நாடுகளின் கடன் உதவியுடன் நசுக்குவதற்குரிய வகையில் அரசு வரவு செலவுத்திட்டம் தயாரித்துள்ளது. வடக்குக் கிழக்கில் மனிதப்படுகொலைகளைச் செய்வதுடன் அவர்களின் உடமைகளையும் தினமும் நாசமாக்கி வருகின்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த பிரதிநிதி தனதுரையில் நாம் முன்னெடுத்துள்ள ஈழப்போராட்டமானது தேசத்தின் எல்லையைக் குறிப்பதற்காகவோ முத்திரைகளைப் பதிப்பதற்காகவோ கொடிகளை நாட்டுவதற்காகவோ அல்ல இந்த மண்ணில் வாழுகின்ற மக்கள் மகிழ்ச்சிகரமாக வாழவேண்டும் என்பதற்காக சகல அடக்குமுறைகளையும் உடைத்தெறிவதற்காகவே நாம் போராடுகின்றோம் என்றும் கூறினார். (வா)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்